நகல்

கும்பகோணம்,
2-1-06

மகாவித்வானும் ஸகலகுண ஸம்பன்னருமாயும் ஆதித்யனைப்போல் அத்விதீயராய் விளங்கிவரும் அய்யரவர்களுக்கு அனேக ஸாஷ்டாங்க நமஸ்காரம்.

இன்றையதினம் வர்த்தமான பத்திரிகையில் நமது இந்தியா கவர்ன்மெண்டாரால் தங்களுக்கு "மஹாமஹோபாத்யாயர்" என்றும் உன்னதமான பிருது கொடுக்கப் பட்டிருப்பதாய் அறிந்து அளவற்ற ஆநந்தத்தை யடைந்திருப்பதைத் தங்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒருவிதமான உலகப் பேறும் இச்சிக்கப்படாமல் ஈசனது திருவருள் ஒன்றே பரமபுருஷார்த்தமாய்த் தங்களால் கருதப்பட்டு வந்திருக்கிறது என்பது யாவராலும் அறியப் பட்ட விஷயம். ஆயினும் என்போலுள்ளவர்க்கு இந்த சுபசமாசாரம் மிகுதியான ஸந்தோஷத்தை யடைவதற்குக் காரணமாயிருக்கிறது. உலகமெல்லாம் புகழ்ந்து கொண்டாடும் இச்சமயத்தில் அடியேனும் ஒருவாறு துணிந்து எழுதிக் கொண்டது என்னுடைய ஆவலைத் தீர்த்துக் கொள்வதற்கு மாத்திரமே தவிர வேறில்லை. இதனால் தங்களுடைய பெருமைக்குக் கூடுதல் ஒன்றும் காணவில்லை. தங்கத்துக்கு முலாம் பூசுவதினால் ஏதேனும் உயர்வுண்டாகுமோ.

வி.வி. கல்யாணஸுந்தரய்யர் நேற்றையதினம் இவ்விடம் வந்திருந்தார். தங்களுடையவும், குழந்தைகளுடையவும் க்ஷேமத்தை அறிந்து கொண்டேன். சீக்கிரத்தில் தாங்களிவ்விடம் விஜயம் செய்யலாமென்று கேட்டு ஆவலுடன் தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தங்கள் விதேயன்,
சுந்தரராமன்.

நகல்

8

XV

24

கும்பகோணம்

சுந்தரராம · · அவர்கள்

2. 1. 06

பக். 1

F 200 –
F 202

ஸ்ரீ.

page. 581 to 583.